இணைந்த சேவைகள் சுற்றறிக்கை : 01/2019

எனது இலக்கம்: PA/POLICY/කා.ක.ඉම් විභාග IV

இணைந்த சேவைகள் பிரிவு
பொது நிருவாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
கொழும்பு 07.

2019.04.10

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள் / அதிபர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**ஊழியர் சேமலாப நிதிய எழுதுநர் சேவையிலிருந்து அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்பு / தரத்துக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துவதற்கான சலுகைக் காலத்தினை வழங்குதல்**

உரிய வகையில் பரீட்சை நடாத்தப்படாமை காரணமாக குறித்த திகதிகளில் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துவதற்கு முடியாத அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்களுக்கு வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துவதற்கான சலுகைக் காலத்தினை வழங்கிய 2017.02.16 ஆந் திகதிய இணைந்த சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் பால் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். அதனை முன்னுதாரணமாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதிய எழுதுநர் சேவையிலிருந்து அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்புக்கு / தரத்துக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கான சலுகையினை வழங்க அரசாங்க சேவை ஆணைக்குழு கட்டளையிட்டுள்ளது.

i. முன்னைய சேவையான ஊழியர் சேமலாப நிதிய எழுதுநர் சேவையிலிருந்து அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்புக்கு / தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அச் சேவையின் II ஆம் வகுப்புக்கு / தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்களுக்கு பதவியுயர்வு கிடைக்கப்பெற்ற திகதி முதல் அதனைத் தொடர்ந்துவருத் பரீட்சைச் சந்தர்ப்பங்கள் 06 க்கான சலுகைக் காலத்தினை வழங்குதல்.
ii. 2004.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதிய எழுதுநர் சேவையின் II "அ" வகுதிக்கு தரமுயர்த்தப்பட்டு, குறித்த வினைத்திறன் காண் தடைப் பரீட்சையினை முழுமைப்படுத்தியிராத அலுவலர்களுக்கு 2004.01.01 ஆந் திகதியின் பின்னர் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையினை முழுமைப்படுத்துவதற்காக அதனைத் தொடர்ந்துவரும் பரீட்சைச் சந்தர்ப்பங்கள் 06 இற்கான சலுகைக் காலத்தினை வழங்குவதற்கு,

iii. மேற்குறிப்பிட்ட வகையில் வினைத்திறன் காண் தடைக்கான சலுகையினை வழங்குகையில் ஒட்டுமொத்த சேவையின் அலுவலர்களுக்கு வழங்கிய சலுகை மற்றும் விகிதாசாரத்தின் அடிப்படையில் சலுகையினை வழங்க வேண்டும் என்பதால், 2004.01.01 ஆம் திகதிக்கு முன்னர் ஊழியர் சேமலாக நிதிய எழுதுநர் சேவையில் நியமனம் பெற்று அச் சேவையின் II 'அ' வகுப்புக்கு தரமுயர்த்தப்பட்டு, குறித்த வினைத்திறன் காண் தடைக்கான சம்பள படிமுறையின் 2004.01.01 ஆந் திகதிக்கு முன்னர் எழுந்துள்ள அலுவலர்களின் 2004.01.01 ஆந் திகதிக்கு முன்னர் இடம்பெற்ற சம்பள ஒத்திவைப்புக்களை அவ்வாறே வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும்,

02. அதற்கிணங்க II ஆம் வகுப்புக்குரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தல் / முழுமைப்படுத்தலை தாமதப்படுத்தியதன் காரணமாக;

i. II ஆம் தரத்துக்குரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சையினை உரிய திகதியில் சித்தியெய்துவதற்கு முடியாமற் போனதன் அடிப்படையில் சம்பள ஏற்றங்கள் ஒத்திவைக்கப்பட்ட அலுவலர்களும்,
ii. அதன் காரணமாக சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில் I ஆம் தரத்துக்குரிய பதவியுயர்வினை உரிய காலத்தினை விட தாமதமாக பெற்றுள்ள அலுவலர்களும்,
இதன் கீழ் தனது ஒத்திவைக்கபட்ட சம்பள ஏற்றங்கள் மற்றும் அதன் காரணமாக தாமதப்படுத்தப்பட்ட சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில் I ஆம் தரத்துக்கு பதவியுயர்ப்புகள் ( இலக்கம் 1372/23 மற்றும் 2004.12.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பிரமாணக் குறிப்பு 12.3 மற்றும் இலக்கம். 1840/34 இனையுடைய 2013.04.02 ஆந் திகதிய அச் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.2 ஆம் பிரிவுகளின் குறிப்பிடப்பட்டுள்ள) மாத்திரம் உரித்துடையதாக்கிக் கொள்வதற்காக தற்போது வினைத்தின் காண் தடைப் பரீட்சையில் அல்லது பதவியுயர்விற்காக அல்லது சலுகையினைக் கோரி மேன்முறையீட்டினை முன்வைக்காத அலுவலர்களும் தங்களது திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் கோரிக்கையொன்றினை எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. இதுவானது கடந்த காலத்திலும் தாக்கம் செலுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சலுகையாக வழங்கலாக அமைவதோடு கடந்த காலங்களில் இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக ஏதேனுமோர் தீர்வினை தற்போது பயன்படுத்த முடியாது என்பதாலும் அவ்வாறான விடங்களின் போது எடுக்கப்பட்ட கடந்த கால செயற்பாடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பதாலும் பின்வரும் வகையில் குறிப்பிடப்பட்டுள்ள இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டினை கவனத்திற் கொள்வதற்குரிய வாய்ப்புக்கள் ஏதுமில்லை என தெளிவுபடுத்துகின்றேன்.

i. இச் சலுகையினை உரித்துடையதாக்கிக் கொள்வதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பள ஏற்ற ஒத்திவைப்புக்கள் காரணமாக இழந்த, ஏனைய சேவைகளுக்குச் செல்வதற்கு அல்லது பதவியுயர்த்துவதற்காக அமைந்த ( இலக்கம் 1372/23 மற்றும் 2004.12.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் மற்றும் இலக்கம் 1840/34, 2004.12.24 ஆந் திகதிய

அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள சேவைப் பிரமாணத்தின் 12.2 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) அல்லது போட்டிப் பரீட்சைகளுக்கு / நேர்முகப் பரீட்சைகளுக்கு அல்லது அவ்வாறான ஏதேனும் தேர்ந்தெடுப்புக்காக அமைந்த சந்தர்ப்பத்திற்காக தோற்றும் வாய்ப்பினை இழத்தல் தொடர்பான சலுகைக்கான கோரிக்கையினை முன்வைப்பதற்கான மேன்முறையீடு.

ii. இச் சலுகையைப் பெறுவதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பள ஏற்றங்கள் காரணமாக இழக்கப்பட்ட பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் தொடர்பான சலுகையினைக் கோரி முன்வைக்கும் மேன்முறையீடு

iii. இச் சலுகையினை உரித்தாக்கிக் கொள்வதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பள ஏற்றங்கள் ஒத்திவைப்பட்டதனைக் கண்டறியாது / பொடுபோக்கினால் மேற்கொள்ளப்பட்ட தவறான பதவியுயர்வுகள் அல்லது வேறு போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றி அதில் சித்தியெய்து நேர்முகப் பரீட்சையின் போது அல்லது மற்றொரு சந்தர்ப்பத்தில் சம்பள ஏற்றம் ஒத்திவைக்கப்படல் தொடர்பாக கண்டறிதல் அல்லது கருதப்படல் காரணமாக குறித்த பதவியுயர்வு அல்லது பரீட்சைப் பெறுபேறின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் அல்லது வரப்பிரசாதங்கள் கிடைப்பதிலிருந்து நிறுத்தப்பட்டுள்ள அலுவலர்களினால் அவ்வாறு நிறுத்தப்பட் நியமனங்கள் / வரப்பிரசாதங்களினைப் பெற்றுப்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

04. 2004.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதிய எழுதுநர் சேவையில் நியமனம் பெற்று அச் சேவையின் II 'அ' வகுதிக்கு பதவுயுயர்த்தப்பட்டு குறித்த வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் 2004.01.01 ஆந் திகதி வரை சித்தியெய்திராத அலுவலர்களும் 2004.01.01 ஆந் திகதியின் பின்னர் இச் சுற்றறிக்கையின் கீழ் குறித்த வினைத்திறன் காண் தடைப் பரீட்சையினைப் பூர்த்தி செய்வதனைத் தொடர்ந்துவரும் பரீட்சைச் சந்தர்ப்பங்கள் 06 இற்கான சலுகைக் காலம் உரித்துடையதாகும், என்றாலும் 01(iii) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 2004.01.01 ஆந் திகதிக்கு முன்னர் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையினை பூர்த்தி செய்திராது காரணமாக இடம்பெற்ற சம்பள ஒத்திவைப்பொன்றாயின் அது அவ்வாறே நிலவுவதுடன், இதன் மூலம் அதற்கு சலுகைகள் ஏதும் உரித்துடையதாகாது.

ஒப்பம்./ கே.வீ.பி.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்